FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364182

1. District மாவட்டம் : திருச்செந்தூர் PS காவல்நிலையம் : தி. க. மாவட்ட Year ஆண்டு 2026 FIR No முதல் தகவல் எண் 04/2026 Date நாள் 19.06.2026

2. (i) Act சட்டம் The Prevention of corruption Act Sections பிரிவுகள் 7, 12 r/w 7
(ii) Act சட்டம் 1988 as amended by the Prevention Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 18.06.2026 Date to நாள் வரை : 18.06.2026
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 12.00 Hrs Time to நேரம் வரை : 22.00 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 Time நேரம் : 13.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-1 Time நேரம் : 13.00 Hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் நேரினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ வடகிழக்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி மாவட்ட போக்குவரத்து அலுவலகம், திருச்செந்தூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி. நளினிதேவி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality நாட்டினம் : இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் : மாவட்ட அலுவலர், திருப்புடம் மற்றும் திருச்செந்தூர் மண்டலம்
(g) Address : முகவரி மாவட்ட அலுவலர் அலுவலகம் கடலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. வி. விஜய், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை - I/வட்டார போக்குவரத்து அலுவலர் (கூ.கூ.பொ), வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செந்தூர்
2) திரு. ஜி. ஜெயபிரகாஷ், தனியார் நிர்வாகம் (2 நிலையாளர்), மற்றும் ஒப்பந்த பயிற்சி பள்ளி, திருச்செந்தூர். 3) திரு. அ. முகமதுஅன், தனியார் முகவர்கள் (உரிமையாளர்), ஒப்பந்தம் ஒப்பந்த பயிற்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant: பள்ளி, நிலமங்கலம், திருச்செந்தூர்.
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிணவிசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
19.06.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.06.2026

Name: பெயர் E. அன்பரசன்
Rank: நிலை காவல் உதவி ஆய்வாளர்
மு.த.எ.பிரிவு
தஞ்சாவூர்.

கள்ளக்குறிச்சி ஊ.த.க.பிரிவு குற்ற எண்.04/2026, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 இன் விபரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது. அய்யா, நான் இன்று 19.06.2026-ந் தேதி சுமார் 13.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது திருமதி.கு.கலைச்செல்வி, ஆய்வுக்குழு ஆய்வாளர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 19.06.2026, 15.00 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.04/2026/KLK u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆய்வுக்குழு ஆய்வாளர் கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர், கு.கலைச்செல்வி, ஆய்வுக்குழு ஆய்வாளர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி. ந.க.எண்:ஆகு.2/317/2026, நாள்.19.06.2026 பொருள்: திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - கள்ளக்குறிச்சி வட்டார போக்குவர்த்து அலுவலகம் - 18.06.2026 அன்று கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:18.06.2026.

கள்ளக்குறிச்சி மாவட்ட துணை ஆய்வுக்குழு ஆய்வாளரான கு.கலைச்செல்வி, ஆகிய நான் 18.06.2026-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ருத்ரா, நேஷனல் மற்றும் ஜெயம் டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் புரோக்கர்கள் போன்று செயல்படும் வெளிநபர்கள் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை-1/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) அவர்களை சந்தித்து அணைத்து விதமான எப்சி, புதியவாகனம் பதிவுசெய்தல் பெயர் மாற்றம் செய்தல் மற்றும் இதர வேலைகள் செய்வதற்காக பணம் கொடுக்க போவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.இ.அருண்ராஜ், காவல் ஆய்வாளர் அவர்களிடம், கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து நானும் காவல் ஆய்வாளரும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினருடன் உடனடியாக அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 11.50 மணியளவில் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை கண்காணித்து மதியம் சுமார் 12.00 மணிக்கு மேற்கு பார்த்த காம்போண்டில் வடக்கு பார்த்து அமைந்து இருக்கும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உள்ளே

சென்றோம். அப்போது எங்களையும், எங்களது குழுவினரையும் கண்ட சிலர் பயந்து கொண்டு அலுவலகத்தை விட்டு ஓட முற்பட்டனர். அப்போது காவல் ஆய்வாளர் அலுவலகத்தின் முகப்பு வாசல் கேட்டை தன்னுடன் வந்த காவல் குழுவினரை மூடச்சொன்னார். அப்போது என்னுடன் வந்த காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்து பயந்து ஓட முற்பட்டவர்களை, அலுவலகத்தின் முன் ஹாலில் உட்காரவைத்து விட்டு, காவலர்களை நியமித்துவிட்டு அலுவலகத்தின் உள்ளே சென்றோம். அங்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அறைக்கு சென்றோம். அங்கு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தான் மோட்டார் வாகன ஆய்வாளர் எனவும், தான் வட்டார போக்குவரத்து அலுவலராக முழுகூடுதல் பொறுப்பு வகிப்பதாகவும் சொன்னார். அவரிடம் எங்களையும், காவல் குழுவினரையும் எங்களது அடையாள அட்டை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டோம். பின்னர் அவரை பற்றி விசாரிக்க தன் பெயர் திரு.விஜய் வயது 44/2026 த/பெ வீரப்பன், மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை-1/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ), வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்றும், தான் தற்காலிகமாக காமராஜர் நகர், ஆர்.ஆர் பள்ளி பின்புறம், நீலமங்கலம், கள்ளக்குறிச்சி என்ற முகவரியில் வசித்து வருவதாக சொன்னார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை-1/வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ), திரு.விஜய் அவர்கள் முன்னிலையில், எனது அறிவுரைப்படி காவல் ஆய்வாளர் திரு.இ.அருண்ராஜ் மற்றும் காவல் குழுவினருடன் சுயபரிசோதனை செய்து காண்பித்து எங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு பக்கதில் உள்ள அறைக்கு சென்று அங்கு உள்ளவரை விசாரிக்க தன் பெயர் திருமதி. முத்துலட்சமி, நேர்முக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்று சொன்னார். பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு நேர் எதிரே உள்ள பெரிய அறைக்கு நானும், காவல் ஆய்வாளர் மற்றும் இதர காவல் குழுவினரும் சென்று அங்கு வரிசையாக மேஜை போட்டு மேற்கு மற்றும் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபர்களை பற்றி விசாரிக்க, தனது பெயர் திரு.மணிமாறன், இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்று சொன்னார். அவருக்கு முன்னாடி உள்ள நாற்காலியில் உள்ள நபரை விசாரிக்க தனது பெயர் திருமதி.இரதி, இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்று சொன்னார். அவருக்கு பின்புற நாற்காலியில் உள்ள நபரை பற்றி விசாரிக்க திரு.சிவக்குமார், இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்று சொன்னார். அவருக்கு பின்னால் உள்ள நபரை விசாரிக்க அவர் திருமதி. அபிராமி, இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்று சொன்னார். அவருக்கு பின்னாடி காலியாக உள்ள இருக்கையை பற்றி கேட்க, அந்த

இருக்கை திரு.அசோக்குமார், இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்றும், அவர் பவானி சாகர் பயிற்சிகாக சென்று இருப்பதாகவும் சொன்னார்கள். பின்னர் நானும், காவல் ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வடகிழக்கு மூளையில் தெற்கு வாயிற் கொண்ட அலுவலக அறைக்கு சென்று அந்த அறையின் தென்மேற்கு மூளையில் கிழக்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் திரு.சண்முகம், அ பிரிவு கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்று சொன்னார். பின்னர் அதே அறையில் வடக்கு சுவற்றின் அருகில் வரிசையாக கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபர்களை பற்றி விசாரிக்க, திருமதி.மீனா, உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவருக்கு முன்னாடி உள்ள இருக்கையை பற்றி விசாரிக்க திரு.மாரியப்பன், உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் என்று சொன்னார்கள். மேலும் அந்த அறையில் தென்கிழக்கு மூளையில் வடக்கு பார்த்துவாறு அமர்ந்திருந்த இருக்கையை பற்றி கேட்டபோது அது திரு.சுதர்சன் என்பரின் இருக்கை என்றும், அவர் தற்செயல் விடுப்பில் உள்ளதாக கூறினார்கள். மேலும் அதே அறையில் கிழக்கு சுவற்றில் ஒட்டினாற்போல் உள்ள இருக்கையை பற்றி விசாரிக்க திரு.பெளிக்ஸ், உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி என்று சொன்னார்கள். அதனை தொடர்ந்து மேற்படி அறைக்கு நேர் எதிரே வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் தென்கிழக்கு மூளையில் வடக்கு பார்த்து வாயிற் கொண்ட அறையில் மேற்கு பார்த்து வரிசையாக அமர்ந்திருந்த நபர்களை பற்றி விசாரிக்க அவர் பெயர் திரு.சுசிந்திரன், Data Entry Operator ஆக தற்காலிகமாக வேலை பார்ப்பதாகவும் சொன்னார். பின்னர் அவருக்கு வலது பக்கத்தில் உள்ள நபரை பற்றி விசாரிக்க அவர் பெயர் திரு.உதயகுமார் Data Entry Operator ஆக தற்காலிகமாக வேலை பார்ப்பதாகவும் சொன்னார். பின்னர் அதே அறையில் வடமேற்கு மூளையில் மேற்கு பார்த்து இருக்கும் இருக்கையை பற்றி விசாரிக்க அவர் பெயர் திரு.பெரிசாமி Data Entry Operator ஆக தற்காலிகமாக வேலை பார்ப்பதாகவும் சொன்னார். மேற்படி நபர்களை அவரவர் இருக்கையில் வைத்து பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து சோதனை செய்ததில் திரு.விஜயிடம் ரூ.150/-ம், திரு.சண்முகத்திடம் ரூ.425/-ம், திரு.மணிமாறனிடம் ரூ.1000/-ம், திருமதி.அபிராமியிடம் ரூ.750/-ம், திருமதி.மீனாவிடம் ரூ.1166/-ம், திரு.மாரியப்பனிடம் ரூ.100/-ம், திரு.பெலிக்ஸிடம் ரூ.100/-ம், திருமதி. இரதியிடம் ரூ.150/-ம், திரு.சிவக்குமாரிடம் ரூ.50/-ம் மற்றும் நேர்முக உதவியாளர் திருமதி.முத்துலட்சுமிடம் ரூ.360/-யும் இருந்தது. மேற்படி தொகைகளை பற்றி கேட்க அவைகள் அனைத்தும் தங்களது பயன்பாட்டிற்காக கொண்டு வந்ததாகவும் அவைகளை முறைபடி வட்டார

போக்கு வரத்து அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக கூறினார்கள். அவர்கள் கூறியதை போல் மேற்படி பதிவேட்டில் பதிவுகள் இருந்ததாலும் அவர்கள் கூறும் காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும் அவரவர்களிடமிருந்த பணம் அவர்கள் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ் கண்டவகையில் கணக்கில் வராத தொகை கைப்பற்றப்பட்டது.

பின்னர் ஹாலில் இருந்த நபர்களை ஒவ்வொருவராக விசாரிக்க தனது பெயர் 1. திரு.இராமசாமி, வயது 38/26, த/பெ நாரயணன் என்றும் தான் தனது ஒட்டுநர் உரிமை தொடர்பாக வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.21,300/- (500 x 41), (200 x 3), (100 x 2) பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தான் விவசாயம் செய்ததில், கிடைத்த பணம் என்று கூறியதால் மேற்படி பணத்தை அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. 2. திரு.அன்பரசன், வயது 31/2026, த/பெ பாஸ்கரன் என்றும், தான் தனது ஒட்டுநர் உரிமை தொடர்பாக வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.3,000/- (200 x 15) பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தானது அக்காவின் பணம் என்று கூறியதால் மேற்படி பணத்தை அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. 3. திரு. ரமேஷ், வயது 39/2026, த/பெ கணேசன் என்றும், தான் தனது ஒட்டுநர் உரிமை தொடர்பாக வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.4,500/- (500 x 9) பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தானது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால், மேற்படி பணத்தை அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. 4. திரு. ரமேஷ், வயது 40/2026, த/பெ ஆறுமுகம் என்றும், தான் தனது ஒட்டுநர் உரிமை தொடர்பாக வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.12,600/- (500 x 18), (200 x 5), (100 x 26) பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தான் தண்ணீர் கேன் வியாபாரம் செய்வதாகவும் அதில் வந்த பணம் என்று கூறியதால், மேற்படி பணத்தை அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. 5. திரு.அண்பு, வயது 61/2026, த/பெ சந்தம் முதலியார் என்றும், தான் ஆட்டோ ஒட்னர் என்றும், தனது ஆட்டோவிற்கு அபராதம் செலுத்துவது தொடர்பாக வந்தாகவும் கூறினார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.7,500/- (500 x 15) பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தான் ஆட்டோ ஒட்டி சம்பாரித்த பணம் என கூறியதால், மேற்படி பணத்தை அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. 6. திரு.பாலகிருஷ்ணன், வயது 61/2026, த/பெ அய்யம்பெருமாள்

என்றும், தான் தனது ஓட்டுநர் உரிமை தொடர்பாக வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.30,000/- (500 x 60) இருந்தது, அதை பற்றி கேட்க, மருத்துவ செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், மேற்படி பணத்தை அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது.

மேலும் அவ்வறையில் இருந்த திரு.ர.பிரகாஷ், வயது 33/2026, த/பெ ரங்கசாமி, மாரியம்மன் கோவில் தெரு, தென்கீரனூர், கள்ளக்குறிச்சி என்பவரையும், திரு.பி.பிரகாஷ், வயது 34/2026 த/பெ பண்ணீர்செல்வம், நடுத்தெரு, நீலமங்கலம் என்பவர்களை விசாரித்த போது அவர்கள் முன்னுக்கு பின் முரனாக பதிலளித்தனர். மீண்டும் மீண்டும் விசாரித்தபோது தாங்கள் இருவரும் National ஓட்டுர் பயிற்சி பள்ளியில் பணிபுரிவதாகவும் தங்களிடம் விண்ணப்பங்கள் மட்டுமே உள்ளன என்றும் அதற்காக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) திரு.விஜய் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய இலஞ்ச பணம் பற்றி கேட்டபோது அது தொடர்பாக தங்களுக்கு ஏதும் தெரியாது தங்களது பயிற்சி பள்ளி உரிமையாளர் திரு.குமரேசனிடம் விசாரித்தால் தெரியவரும் என்று கூறினார்.

அதனை தொடர்ந்து திரு.சீனிவாசன், வயது 42/2026 த/பெ செல்வராசு, வி.அலம்பளம், சின்னசேலம் என்பவரை விசாரிக்க அவர் தான் ருத்ரா ஓட்டுநர் பயிற்சி பள்ளியை கடந்த 4 மாதமாகதான் நடத்தி வருவதாகவும், தான் தினசரி கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வரும் ஓரிரு பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று அதனை முடித்து கொடுத்துவிடுவேன் என கூறினார். மேலும் தான் மணிமுத்தாறு வாய்க்கால் அருகில் தற்காலிகமாக வாடகை இரும்பு சீட்டு போட்டு கொட்டகையில் ருத்தார ஓட்டுர் பயிற்சி பள்ளி நடத்திவருவதாகவும் தான் யாரிடமும் பணம் பெறுவதில்லை எனவும், தன்னை போல் உள்ள சிறு சிறு ஓட்டுநர் பயிற்சி பள்ளி நடத்துபவர்களிடமிருந்து ஜெயம் மற்றும் நேஷனல் ஓட்டுநர் பயிற்சி உரிமையாளர்கள் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அணைத்து விதமான எப்சி, புதியவாகனம் பதிவுசெய்தல் பெயர் மாற்றம் செய்தல் மற்றும் இதர வேலைகள் செய்வதற்காக வரும் பொதுமக்களிடம் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1/வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) அவர்களின் உத்தரவுபடி இலஞ்ச பணம் வசூல் செய்து தங்களிடம் கொடுக்குமாறு கூறியதன் பேரில் தாங்கள் அணைவரும் மேற்படி ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் கொடுத்து வைப்பது வழக்கம், அதனை அலுவலக நேரத்திற்கு பின்பு வசந்தம் ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் பணிபுரியும் திரு.செல்வகுமார் வசூல் செய்து அதனை தக்க நேரத்தில் மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை-1/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) அவர்களிடம் நேரிலேயோ அல்லது அவரது வங்கி கணக்கிற்கோ அல்லது

அவரை சார்ந்த நபர்களின் வங்கி கணக்கிற்கோ சேர்த்துவிடுவார். இவ்விசாரணையில் கிடைக்கப்பட்ட தகவலிருந்து முதலில் மணிமுத்தாறு ஓடையில் அமைந்துள்ள ருத்ரா ஓட்டுனர் பயிற்சி பள்ளியை திரு.சீனுவாசன் உடன் சென்று பார்த்தபோது அவர் கூறியதுபோல் அங்கு அவர் பயிற்சி பள்ளி நடத்தி வருவதும் அவரிடம் இலஞ்ச பணம் ஏதும் இல்லை என்று தெரியவந்தது. பிறகு அவர் கூறிய தகவலிருந்ததும், இரகசீய தகவலின் அடிப்படையில் உழவர் சந்தை நகராட்சி கட்டித்தில் அமைந்துள்ள ஜெயம் ஓட்டுனர் பயிற்சி பள்ளிக்கு சென்று பார்ததபோது அங்கு மேற்படி பள்ளியின் உரிமையாளர் திரு.சி.ஜெயபிரகாஷ், வயது 48/2026, த/பெ சின்னப்பிள்ளை என்பவரும் பிரண்ட்ஸ் ஓட்டுநர் பயிற்ச்சி பள்ளி உரிமையாளர் திரு.சர்புதின், வயது 55/2026 த/பெ அகமது ஆகியோர்கள் இருந்தார்கள். மேற்படி நபரிடம் மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை-1/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) என்பவருக்கு கொடுக்க வேண்டிய இலஞ்ச பணம் பற்றி கேட்டபோது அவர் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்தார். மீண்டும், மீண்டும் விசாரணை செய்த சிறிது நேரம் கழித்து மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை-1/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) திரு.விஜய் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய இலஞ்ச பணம் என்று தெரிவித்து தனது அலுவலகத்தில் இருந்த மேஜை டிராவில் இருந்த ஒன்பது கட்டுகளாக இருந்த ரூ.13,800/- (500X21), (200X13), (100X7) ரூ.6,000/- (500X12) ரூ.50,000/- (500X100), ரூ.50,000/- (500X100), ரூ.50,000/- (500X100), ரூ.50,000/- (500X100), ரூ.11,000/- (500X22), ரூ.23,200/- (200X116) மற்றும் ரூ.14800/- (100X148) ஆக மொத்தம் ரூ.2,68,800/- பணம் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரையும், உடனிருந்த பிரண்ட்ஸ் டிரைவிங் ஸ்கூல் சர்புதின் என்பவரையும் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு விசாரணைக்காக அரசு வாகனத்தில் அழைத்து வரப்பட்டது. அதனை தொடர்ந்து நேஷனல் ஓட்டுனர் பயிற்சி பள்ளியில் பணிபுரியும் திரு.பிரகாஷ், த/பெ பண்ணீர்செல்வம் மற்றும் பிரகாஷ் த/பெ ரங்கசாமி என்பவர்கள் கூறிய தகவலிருந்தும் எனக்கு கிடைத்த இரகசீய தகவலின் படியும் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து கிளம்பி பழைய RTO அலுவலகத்திற்கு அருகில் உள்ள நேஷனல் ஓட்டுநர் பயிற்சி பள்ளிக்கு சென்று அங்கு இருந்து உரிமையாளர் திரு. குமரேசன் என்பரை விசாரணை செய்தபோது அவர் முதலில் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்தார். மீண்டும், மீண்டும் விசாரணை செய்த சிறிது நேரம் கழித்து மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை-1/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) திரு.விஜய் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய இலஞ்ச பணம் என்று தெரிவித்து தனது அலுவலகத்தில் இருந்த மேஜை டிராவில் இருந்த பத்து கட்டுகளாக இருந்த ரூ.200/- (100X2), ரூ.11000/- (200X54) ரூ.69,000/- (500X138) ரூ.6,400/- (100X64) ரூ.3,600/- (200X18), ரூ.11,500/- (500X23),

ரூ.3,800/- (200X19), ரூ.1,800/- (100X18), ரூ.1,000/- (500X2) மற்றும் ரூ.200/- (100X2) ஆக மொத்தம் ரூ.1,08,500/- பணம் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரை கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு விசாரணைக்காக அரசு வாகனத்தில் அழைத்து வரப்பட்டது. பிறகு அலுவலகத்தில் இருந்த மற்றும் அழைத்து வரப்பட்ட நபர்களை தனித்தனிய அழைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடக்கவேண்டிய அணைத்து விதமான எப்சி, புதியவாகனம் பதிவுசெய்தல் மற்றும் இதர வேலைகள் அணைத்திற்குமே இலஞ்சமாக பணம் பெற்றால் திடீர் சோதனையின் போது அகபட்டு கொள்ளகூடும் என்று காரணத்தினால் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் முன்போ அல்லது அருகாமையிலோ நடத்தாமல் கள்ளக்குறிச்சியிலிருந்து வேப்பூர் செல்லும் சாலையின் இடது புறம் உள்ள தனியாருக்கு சொந்தமான நிலத்தில் வைத்து நடைபெறுகிறது. மேலும் அணைத்து ஓட்டுனர் பயிற்சி பள்ளியிலிருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) திரு.விஜய் அவர்களின் உத்தரவு படி ஏழலையான் ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் வேலை செய்யும் நபர்களோ, வசந்தம் ஓட்டுனர் பயிச்சி பள்ளியில் வேலை செய்யும் திரு.செல்வகுமாரோ இலஞ்ச பணத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாவோ பெற்று அதனை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அலுவலக நேரம் முடித்து அவர் கூறும் இடத்தில், கூறுகின்ற நபர்களிடம் நேரடியாகவே அல்லது அவரின் வங்கி கணக்கிற்கோ அனுப்பிவைக்கிறார்கள் என்ற விவரம் தெரியவருகிறது.

பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த பதிவறை மற்றும் கழிவறை, அலுவலகத்தின் மாடி படிக்கு அடியில் உள்ள இடம் மற்றும் இதர அறைகளை சோதணை செய்ததில் சந்தேகம் படும் வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அதனை தொடர்ந்து பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1/வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) திரு.விஜர் அவர்களிடம் அலுவலக வருகை பதிவேட்டை கேட்க, வருகை பதிவேடுகளை எடுத்து ஆஜர் செய்தார், மேற்படி பதிவேட்டில் இன்றைய தினம் அவரது சுருக்கொப்பம் இருந்தது. தொடர்ந்து அலுவலகத்தில் பராமரிக்கபடும் பணம் இருப்பு பதிவேட்டை பற்றி கேட்க, மேற்சொன்ன பணம் கையிருப்பு பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இன்றைய தின அலுவலை பற்றி பதிவுகள் உள்ள பதிவேடுகள் இருப்பின் அவற்றினை ஆஜர் செய்யுமாறு கோரியதற்கு அணைத்து பணிகளும் ஆன்லைன் மூலம் செய்வதால் தனியாக பதிவேடுகள் ஏதும் பராமரிக்கவில்லை என்றும் சொன்னார். எனவே மேற்சொன்ன

பதிவேடுகள் மற்றும் பணம் ரூ.3,77,300/- மட்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக மோட்டார் வாகன ஆய்வாளரிடம் தெரிவித்து விளக்கம் கேட்டபோது, மேற்படி பணம் குறித்து தனக்கு ஏதும் தெரியாது என தெரிவித்தார். மேலும் விசாரணையின் போது அவருடைய வாட்சப் செயலி பார்வையிட்டபோது அவர் kall Selvakumar (9842589698) என்று பதிவு செய்யப்பட்ட எண்ணிற்கு தனது கைபேசியின் மொபைல் நெட்வொர்க்கிலிருந்தும் அலுவலக Wifi லிருந்தும் வாட்சப் கால் பேசியிருப்பது தெரியவருகிறது. மேலும் kall Selvakumar என்று பதிவு செய்யப்பட்டிருந்த வாட்சப் பேஜை பார்வையிட்டபோது அவர் மேற்படி நபர் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அவர்களுக்கு கடந்த 14.06.2026-ந்தேதி ஞாயிற்று கிழமை அன்று ரூ.32,81,900/-க்கான 34 ஒட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் இதர நபர்களிடமிருந்து பணம் தொடர்புடைய தரவுகளை அனுப்பி உள்ளார். மேற்படி தரவுகளுக்கான பரிமாற்றங்களை ஸ்கிரின் சாட் எடுத்தும் பதிவுயிறக்கும் செய்தும் விசாரணைக்காக 10 தாள்கள் கைப்பற்றப்பட்டது. அவைகளுக்கான கொடி நாள் வசூல் குறித்து இவ்வலுவலக கண்காணிப்பாளர் திரு.சண்முகம் அவர்களிடம் கேட்டபோது, கொடிநாள் வசூல் ஆன்லைன் மூலம் வசூலிப்பதாவும், தனியாக பதிவேடு ஏதும் இவ்வலுவகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

பிறகு கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1/வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ) திரு.விஜய் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 18.06.2026-ம் தேதி சுமார் 12.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது திரு.விஜய், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1/வட்டார போக்குவரத்து ஆய்வாளர் (மு.கூ.பொ)அவரது அறிவுறுத்தலின் பேரில் ஜெயம் மற்றும் நேஷனல் ஓட்டுனர் பயிற்சி பள்ளிகளால் கள்ளக்குறிச்சி வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு ஓட்டுர் உரிமம் வாங்குதல், எப்சி புதுபித்தல் ஆகிய பல்வேறு வேலைகளுக்ககாக பொதுமக்களிடம் வசூல்

செய்யப்பட்டு அவருக்கு கொடுக்க வைத்திருந்த இலஞ்ச தொகை மொத்தம் ரூ.3,77,300/-.கைப்பற்றப்பட்டது. மேலும், அது தொடர்புடைய வாட்சப் தரவுகளின் ஸ்கீரின் சாட் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக நான் கொடுக்கும் புகாரின் பேரில் சம்மந்தப்பட்ட குற்ற அலுவலர்களான 1) திரு.விஜய், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1)/ வட்டார போக்குவரத்து அலுவலர் (மு.கூ.பொ), வட்டார போக்குவரத்து அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் 2) திரு.சி.ஜெயபிரகாஷ், வயது 48/2026 த/பெ சின்னப்பிள்ளை 3) திரு.குமரேசன், வயது 46/2026, த/பெ அழகாசன் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள ஒப்பம்/ XXXX (கு.கலைச்செல்வி) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி.

Madam,

Received the above computer typed complaint on 19.06.2026 at about 13.00 hrs. After getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Kallakurichi Vigilance and Anti-Corruption Cr.No.04/2026/KLK u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 15.00 hrs today on 19.06.2026 sd xxxxxx on 19.06.2026 (E.Arunraj) (Inspector of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Principal District and Sessions Judge, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

19.06.2026

(E.Arunraj)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.